போதகர். சார்லஸ் சதீஷ் குமார்,
அகில உலக மிஷனரி இயக்கம், இம்மானுவேல் கிறிஸ்துவ சபை, வேப்பங்குப்பம், வேலூர்.

## பாபிலோன் வரலாறு

**அறிமுகம்:-**

பாபிலோனியாதேசம் மொசப்பத்தாமியா பகுதியில் அமைந்திருந்தது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் தற்போதையஈராக்அமைந்திருக்குமிடத்தில் மொசப்பத்தாமியா தேசம் அமைந்திருந்தது. இந்த தேசத்தினூடாக இரு பிரபல்யமான ஆறுகள் ஓடுகின்றன (ஐபிராத்து, தைக்கிரீஸ்). மெசொப்பத்தாமியா என்றால் கிரேக்க மொழியில் நதிகளுக்கிடையில் என்று பொருள்படும்.
பாபிலோன் எனும் வார்த்தை பாபேல் எனும் வார்த்தையில் இருந்து மருவி உருவாகியது. பாபேல் தேசத்தை நிம்ரோத் எனும் மனிதன் கட்டினான்;. இவனே வேதாகம அடிப்படையில் உலகத்தில் முதலாவது அரசாட்சியை அமைத்தவன்.

**ஆதியாகமம்:**

10:8கூஷ் நிம்ரோதைப் பெற்றான். இவன் ப+மியிலே பராக்கிரமசாலியானான்.

10:10சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத் கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள்.

பாபிலோனிய சாம்ராச்சியத்தை நாங்கள் சரியாக படிக்க வேண்டுமாயின், எங்களுக்குசுமேரிய, மற்றும்அக்காடிய(அக்காத்) இராச்சியத்தைப்பற்றி தெரிந்திருத்தல் அவசியம். கி. மு 3000 ஆண்டளவில் மெசொப்பத்தாமியாவிலே சுமேரிய மக்கள் குடியிருந்தனர். அவர்கள்ஊர், லகாஷ், எரிதுஎனும் பட்டணங்களை கட்டினார்கள். அவர்களுக்கிடையிலே தொடர்ந்து யுத்தங்கள் நடந்தது, காரணம் தண்ணீர். நீர் வளம் நிறைந்த பிரதேசங்களுக்காக அவர்களுக்குள்ளே அடிக்கடி யுத்தங்கள் வந்தது. பின்பு அக்காடிய மக்கள் அராபியாவிலே இருந்து வந்தனர், அவர்களுக்கும் சுமேரியர்களுக்கும் யுத்தங்கள் நடந்தன, முடிவில்அக்காடியமக்கள் வெற்றியீட்டினர். அவர்கள் அக்காத் எனும் பட்டணத்திலே இருந்தனர். பிற்காலங்களில் அது பாபிலோனக அழைக்கப்பட்டது. ஆனால் சில நூற்றாண்டுகளுக்குப்பின்பு சுமேரிய மக்கள் அக்காடிய இனத்தை தோற்கடித்து தங்களது மெசொப்பத்தாமியாவை தங்களது வசமாக்கினர். பிற்காலங்களில்செமித்திய ஜனங்கள்மூலமாக சுமேரியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அக்காடிய மக்களும் செமித்திய இனத்தை சேர்ந்தவர்கள்.அக்காடிய இராச்சியத்தை சார்கோன் கட்டினான்.

**பாபிலோனிய சாம் ராச்சியத்தின் காலத்தை 3 பகுதிகளாக பிரிக்கலாம்**

ஆதி பாபிலோனிய காலப்பகுதி இடைக்கால பாபிலோனிய காலப்பகுதி புதிய பாபிலோனிய காலப்பகுதி

ஆதி பாபிலோனிய காலப்பகுதியில் ஹமுராபி மன்னனும், புதிய பாபிலோனிய காலப்பகுதியில் ... பாபிலோனிய சரித்திரத்தின் உச்சமாக நேபுகாத்நேச்சர் மன்னனும் திகழ்கின்றனர்.

**பாபேல் கோபுரம்:**

கிரேக்க மொழியில் பாபேலை பாபிலோன் என்று அழைப்பர்.

ஆதியாகமம் 10: 8 - 10கூஷ்நிம்ரோதைப்பெற்றான். இவன் ப மியிலே பராக்கிரமசாலியானான்.சிநெயார்தேசத்திலுள்ளபாபேல், ஏரேக், அக்காத் கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள்.பாபேல் எனும் வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது (1.தாறுமாறு- குழப்பம்: Babel2.கடவுளின் வாசல்: Babilani) . பாபேல் கோபுரம் பாபிலோனிலே கட்டப்பட்டதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லாத போதிலும், அநேகரால் நம்பப்படுகின்றது . பாபிலோனிலே இருந்திக்க வேண்டுமென்று..

ஆதியாகமம் 11: 1- 9வசனங்களில் பாபேல் கோபுரத்தைப்பற்றிய சம்பவத்தை நாம் வேதாகமத்தில் வாசிக்கலாம்.

கோபுரத்தை தேவன் நிறுத்தியதற்கு 2 காரணங்கள் சொல்லப்படுகின்றது.

இன்னொரு தடவை ஜலப்பிரளயம் (நோவா காலத்தில் ஏற்பட்டது போல) வந்தால்.. அதிலிருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்கென்று, ஏனென்றால் ஜலப்பிரளயம் ஏற்பட்டு சில நூற்றாண்டுகளுக்கு பின்பே பாபேல் கோபுரம் கட்டப்பட்டது.

ஜனங்கள் தங்களுக்கு பெயர் உண்டாக வேண்டுமென்று.. கட்டினார்கள்..

**பாபேல் ஆய்வுக்கட்டுரை**

எல்லா விதத்திலும் ஒரே சிந்தையுடையவர்களாக இருந்தார்கள்: 11:4 பின்னும் அவர்கள்: நாம் ப மியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.

11:3 அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

இந்த வசனங்களை சற்று ஆராய்ந்து பார்த்தால் அவர்களுடைய எண்ணம் முழுவதும் ஒரே நோக்கமாக இருந்தது என்று அறியலாம். அதில் நாம் மற்றும் வாருங்கள் எனும் வசனங்களை கவனியுங்கள். அதனுடைய அழுத்தம் அதிகம்.

நகரத்தையும் ஒரு நாட்டினுடைய அரசியல், ஆட்சி, மற்றும் பொருளாதாரம் அந்த நாட்டின் கட்டடங்களில் தெரியும். ஒரு நாட்டினுடைய நகரங்களை வைத்து அந்த நாட்டை எடை போடுவர்.

வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி தற்காலங்களில் கூட காணலாம் ஒவ்வொரு நாடும் பெரிய, பெரிய கட்டடங்களையும், கோபுரங்களையும் கட்ட விரும்புவதை. எவ்வளவு பெரிய கட்டங்களை கட்டுகின்றார்களோ, அந்தளவிற்கு அவர்களுடைய அதிகாரமும், பலமும் தெரியும்.
அவர்களுடைய நோக்கம் வானத்தை தொடுவாதாக இருந்தது.

ஆதியாகமம் 28:12
அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான். இதோ, ஒரு ஏணி ப மியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

பாபேல் பெருமையான நகராகவே இருந்தது, ஆனால்பாபேல் கோபுரம்கட்டும் நோக்கம் சமயம் அல்லது கடவுள் சம்பந்தப்பட்ட காரியமாகவே இருந்தது.வானத்தை அளாவும்சிகரமுள்ள கோபுரம். இது தான் உலகத்தின்முதலாவது சமயம்சம்பந்தப்பட்ட கோபுரம். சில வேளை இப்படியிருக்கலாம்… பாபிலோனியர்கள் வானத்தின் நட்சத்திரங்களையும் அதன் மூலம் சாஸ்திரங்களை அறியமுற்பட்டிருக்கலாம். ஏனென்றால் பிற்கால பாபிலோனிய, சுமேரிய மக்களின் அநேக தெய்வங்கள் கிரகங்களினதும், நட்சத்திரங்களினதும் பெயரை உடையனவாயிருந்தது. இவற்றை நாம் பார்க்கின்ற போது, பாபேல் கோபுரம் கட்டும் காரியங்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட சமயம், அல்லது மார்க்கம் எனும் ரீதியில் சென்றது. இன்னுமோர் உதாரணம்: பாபேல் என்பதற்கு இருஅர்த்தங்கள்உண்டு, ஒன்றுதாறுமாறு மற்றது கடவுளின் வாசல்.பிற்காலங்களில் பாபிலோனியாவிலே கட்டப்பட்ட சிகுரத், பாபேல் கோபுரத்தின் அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமென்று பலர் கருதுகின்றனர்.
சிகுரத் ஒரு கோபுரம் அதன் உச்சியிலே அந்த பட்டணத்தின் கடவுளுக்கென ஒரு கோயில் இருக்கும்.

பல மனிதர்கள் இப்படித்தான் முயல்கின்றனர். தேவனை நோக்கி செல்வதற்கு பல காரியங்களை செய்கின்றனர். அநேக வேலைகள்… செங்கல் அறுக்க வேண்டும் நன்றாக சுடவேண்டும். கோபுரம் கட்ட வேண்டும். தேவனை காண்பதற்கு மனிதன் எடுக்கும் வீண் முயற்சி. இதன் மூலம் ஒன்றை மட்டும் பெறுகின்றான். நல்ல பெயரை, தனக்கென, தங்களுக்கென்று.

**பாபேல் பிரச்சனையின் வேர்**

ஆதியாகமம் 10:8கூஷ் நிம்ரோதைப் பெற்றான். இவன் ப மியிலே பராக்கிரமசாலியானான்.10:9இவன் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப்போல என்னும் வழக்கச்சொல் உண்டாயிற்று.10:10சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத் கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள். இந்த வசனத்தில்பலவான்எனும் வார்த்தையை கவனியுங்கள்.அவன் கர்த்தருக்கு முன்பாக பலத்தவனாக இருந்தான்.

பேர் பெற்றல்என்பது ஒருவனுடைய பலத்தை காட்டுகிறது. இந்த வசனத்தை கவனியுங்கள்

ஆதியாகமம் 6:4அந்நாட்களில் இராட்சதர் ப மியிலே இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் ப ர்வத்தில்பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.

ஆரம்பத்திலிருந்து பாபேல் கோபுரம் யாருடைய பெயரை பெருமைப்படுத்துகின்றது? மனிதனுடைய பெயரையா, அல்லது தேவனுடைய பெயரையா? நிம்ரோத்தினுடைய பெயர் தேவனுக்கு முன்பாக பலத்தது ஜனங்கள் தங்களுக்கென்று பெயரை உருவாக்க விரும்பினார்கள்

இந்த வசனங்களை கவனியுங்கள்

அப்போஸ்தலர் 5:41அவருடையநாமத்துக்காகத்தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்,

3 யோவான் 1:7ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடையநாமத்தினிமித்தம்புறப்பட்டுப்போனார்கள்.
நாமம் அல்லது பெயர் எனும் சொல் தேவனையே குறிக்கும். தேவனை மட்டுமே குறிக்கும்

நிம்ரோத்தினுடைய காலத்திற்கு முன்பே அதாவது ஜலப்பிரளயத்திற்கு முன்பே ஜனங்களுக்கு தேவனுடைய நாமத்தைப்பற்றிய அறிவு இருந்திருக்கிறது.

**ஆதாரம்:**

ஆதியாகமம் 4:26சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான். அப்பொழுது மனுஷர்கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.

தேவனுடைய நாமத்தைப்பற்றியஅறிவு நிச்சயம் நிம்ரோத்திற்கும், பாபேல் ஜனங்களுக்கும் இருந்திருக்கும்ஆனாலும் அவர்கள் நிம்ரோத்தினுடையபெயரையும், தங்களுடைய பெயரையும் உயர்த்தினார்கள். தேவனுடைய பெயரை தள்ளி விட்டார்கள் நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள்என்று சொல்லிக்கொண்டார்கள். பாபேலில் ஜனங்கள் தேவனை தள்ளி விட்டனர். அவர்கள் அறிந்து செய்தார்களோ, அறியாமல் செய்தார்களோ.. ஆனால் அவர்கள் தேவனை தள்ளி விட்டனர்

**சுமேரியா(கி.மு 5000 - 3000)**

ஆதி சுமேரியநாகரிகம்எப்படித்தோன்றியது இதுவரைக்கும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஏறக்குறையகி.மு 5000 ஆண்டளவிலிருந்து கி.மு 3000 ஆண்டுவரைஅங்கே ஒருகலாச்சாரம்இருந்ததாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். பண்டைய நாகரிங்களில் மிகவும் புரதான நாகரிகம் சுமேரியா. மெசொப்பத்தாமியாவில் தோன்றியது.அக்காடிய மொழியில் சுமர் என்றால் காலச்சார நாடுஎன்று பொருள்படும். சுமேரியாவிலிருந்து தான் நாகரீகங்களும், கலாச்சாரங்களும் தோன்றியிருக்கலாம் என்று சில ஆய்வாளர்களின் கருத்து. ஆரம்ப காலங்களில் அதாப், எரிது, இசின், கிஷ், குலாப், லகாஷ், லார்சாம், நிப்பூர் அத்துடன் ஊர் ஆகிய பட்டணங்கள் இருந்தன. ஏறக்குறைய கி.மு 2800 ஆம் ஆண்டுகளில் பல்வேறு ராஜாக்களின் ஆட்சியில் இருந்தன. இவைகள் புரதான சுமேரிய நாகரிகத்தை சார்ந்தவை. இதுவரைக்கும் தெரிந்தவரையில்சுமேரியாவின்முதலாவது மன்னன் எத்தனா. இவன் கிஷ்; பட்டணத்தின் மன்னன்.

**உருக்(கி.மு 3000 - 2000)**

புரதான நகரமாகியஉருக்கைஅராபியர்கள்வர்க்காஎன்று அழைத்தனர்.வேதாகமத்தில்எரேக்என்று அழைக்கப்பட்டிருக்கின்றது. சுமேரியாவின் தலைநகராக உருக் விளங்கியது. கில்காமேஷின் கதையும் இந்தக்காலங்களில் தான் உருவாகியது. ஐபிராத்து நதியண்டையில் இந்த பட்டணம் அமைந்திருந்தது. இப்போது ஐபிராத்து நதி 12 மைலுக்கு அப்பால் பாய்கின்றது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் ஐபிராத்து நதி பாய்கின்ற பாதை சிறிது அகன்றிருக்கின்றது.உருக் எனும் வார்த்தையே ஈராக் ஆக திரிபு பெற்றது. உருக் மக்கள் பெண் தெய்வத்தை வழிபட்டனர்.

**ஊர்(கி.மு 2600 - 2000)**

ஊர்மிகவும் முக்கியம் வாய்ந்த சுமேரிய நகரம். இந்தப்பட்டணம் ஈராக்கின் தென் பகுதியில் அமைந்திருந்தது. ஆபிரகாமும் இந்தப்பட்டணத்தை சேரந்தவன். அக்காடிய இராச்சியத்திற்கு பின்பு ஊர்- நம்மு (கி. மு 2100) எனும் மன்னனால் சந்திரக்கடவுளுக்கு பெரிய சிகுரத் ஊர் பட்டணத்திலே கட்டப்பட்டது.

**லகாஷ்(கி.மு 2100 - 2000)**

தென் மெசொப்பத்தாமியாவின் பகுதியில்லகாஷ்நகரம் அமைந்திருந்தது. லாகாஷீம் சுமேரிய கண்டத்தின் ஒரு பகுதி. பின்பு அக்காடிய மக்களால் சுமேரியா முழுவதும் கைப்பற்றப்பட்டு, அக்காடியாவின் ஆட்சிக்குட்பட்டது. சிறிது காலங்களின் பின்னர் சுமேரியர்கள் அக்காடியih வென்றனர். லகாஷ் ஆண்ட மன்னனுடைய பெயர்: குதேயா. இவன் சமாதானத்தை விரும்பி, நல்ல முறையில் ஆட்சி செய்தான். நல்லவன் மட்டுமல்ல, பலமான ராச்சியத்தை ஸ்தாபித்தவனும் கூட. இவன் சுமேரியாவிலே பல கோவில்களை கட்டினான்.லகாஷ் மக்கள் அநேக கடவுள்கள் இருப்பதாக நம்பினார்கள். குதேயா தனக்கென்று ஒரு கடவுளை வைத்திருந்தான். கடவுளின் பெயர்: நின்கித்சிதா. இவனுடைய மரணத்தின் பின் இவனுடைய மகன் லகாஷை ஆட்சி செய்தான்.

**அக்காடியா(2371 - 2230)**

ஆதி மெசொப்பத்தாமியாவின் தென்பகுதியில் சுமேரியாவும், வடபகுதியில் பிற்கால பாபிலோனும் அமைந்திருந்தது. இந்த இரண்டு பட்டணங்களும் அல்லது தேசங்களும் கி.மு 4000 நூற்றாண்டளவில் ஆரம்பமாகியது. அக்காத்(அக்காடியா) தேசத்திலே அக்காத் எனும் பாஷை பேசப்பட்டது. இது ஒரு செமித்திய மொழி. கி.மு 2340 ஆம் ஆண்டளவில்சார்கோன் மன்னனால் அக்காடிய இராச்சியம்
விரிவடைந்தது. அதன் பின்பு அக்காடியா தேசம் மிகவும் பிரபல்யம் ஆகியது. அக்காடிய இராச்சியத்தின் வீழ்ச்சி நேரம் சுமேரிய முழுவதும் ஒரே யுத்தக்களமாக இருந்தது. லகாஷை தவிர. லகாஷை குதேயா மன்னன் அரசாட்சி செய்தான்.

**செமித்தியர்**

செமித்தியர் என்றால் அநேக ஜாதிகள் என்று பொருள்படும். இவர்கள் சேமுடைய சந்ததியினர். இவர்கள் அராபிய, மெசொப்பத்தாமிய இடங்களில் வாழ்ந்தனர். இவர்களிலிருந்து பல ஜாதிகள் பிரிந்தது.இவர்கள் வம்சத்தில் தான் கிறிஸ்துவும் பிறந்தார்.

**ஏலாம்**

தற்கால ஈரான். ஐபிராத்து நதியின் கிழக்குப்பகுதியில் அமைந்திருந்தது. சுமேரிய மக்களின் நாகரிக காலத்திலே இவர்களது நாகரிகமும் ஆரம்பித்தது. இவர்கள் நான்கு பெரிய பட்டணங்களில் வாழ்ந்தார்கள், அவான், அன்ஷான், சிமாஷ் அத்துடன் தலைநகர் சூசா. கலாச்சார ரீதியில் ஏலாம் பின்தங்கியிருந்தது. அநேக காரியங்கள் அவர்கள் மற்றக்கலாச்சாரங்களிலிருந்து பின்பற்றினார்கள்.எழுத்து வடிவம் சுமேரிய மக்களிடத்திலிருந்தும் கட்டடக்கலையை பாபிலோனியர்களிடமிருந்தும் பின்பற்றினர்.இவர்களுக்கென்று தனிப்பட்ட இலக்கியங்களோ, கடவுள்களோ இருந்ததாக தெரியவில்லை. ஏலாமியருடைய பாஷை வேறு மொழிகளுடன் தொடர்பாயிருக்கவில்லை. இவர்களுடைய மொழியிலிருந்து வேறு மொழிகளும் உருவாகவில்லை. கி.மு 2200 அளவில் எலாம் ஊர் இராச்சியத்தின் கீழ் வந்தது. கி.மு 2000 அளவில் எலாம் வலுப்பெற்று, ஊர் இராச்சியத்தை கைப்பற்றியது. ஏறக்குறைய கி.மு 1600 அளவில் கஸித்ஸ் இராச்சியம் எலாமை மேற்கொண்டது. கி. மு 1160 எலாம் மீண்டும் வலுப்பெற்றது. கஸித்ஸ்-ஐயும் பாபிலோனியாவையும்

மேற்கொள்ளும் அளவிற்கு வலுப்பெற்றது. ஆனால் முதலாவது நேபுகாத் நேச்சரால் கி.மு 1120 ஆண்டளவில் எலாம் தோற்கடிக்கப்பட்டது. மீண்டும் எலாம் கி.மு 750 அளவில் வளர்ந்தது. ஆனால் அசீரியர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்பு மேதிய இராஜாக்களினால் மேற்கொள்ளப்பட்டது.

**ஹைத்திஸ்**

இவர்களுடைய ஆரம்பம் எப்படியென்று தெரியவில்லை என்றாலும், இவர்களுடைய மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிகளை சார்ந்தது.இவர்களை ஹத்துசாஸ் என்றும் அழைப்பர். கி.மு 1595 அளவில் இவர்களினால் பாபிலோனிய இராச்சியம் கைப்பற்றப்பட்டது.

**கஸித்ஸ்**

இவர்களும் இந்தோ- ஐரோப்பிய மொழிகளைப்பேசிய மக்கள். இவர்களும் ஹைத்திஸ் மக்களைப்போலவே மெசொப்பத்தாமியாவுக்குள் உட்புகுந்தனர், கி.மு 1590 ஆம் ஆண்டளவில் இவர்கள் பாபிலோனியாவை கைப்பற்றினர்.

**கால அட்டவணை**

**மெசொப்பத்தாமியா - சரித்திர காலம்**

சுமேரியா (கி.மு 3100 - கி.மு 2000) கில்காமேஷ் சுமேரிய மொழி கலை இந்தியாவுடன் தொடர்பு அக்காடியா (கி.மு 2350- கி.மு 2200) சார்கோன் பாபிலோனியா(கி.ம ு 2000- கி.மு 1600) ஹம்முராபி மன்னனின் சட்டம் நகரங்கள் சமயம்.

1792- 1750 ஹம்முராபி
1595ஹைத்தியர்கள் பாபிலோனை கைப்பற்றுதல்
1590கஸித்ஸ் பாபிலோனை கைப்பற்றினார்கள்
1158எலாமியர்களினால் கைப்பற்றப்பட்டது
730அசீரியர்களின் ஆட்சிக்குட்பட்டது. அசீரிய மகாணம் ஆகியது
689சனகரிப் பாபிலோனை முற்றுமாக அழித்தான்
675அசீரிய மன்னனால் பாபிலோன் கட்டப்பட்டது
625கல்தேயர்கள் கைப்பற்றினார்கள்
605-562நேபுகாத் நேச்சார் 2
எருசலேம், சாலோமோன் கட்டிய தேவாலயமும் அழிக்கப்பட்டது
539பாரசீக மன்னன் கோரேசு 2 பாபிலோனை கைப்பற்றினான்.
482உள்நாட்டு கிளர்ச்சி, பல கோவில்கள் அழிக்கப்பட்டன
330மகா அலெக்ஸாந்தரினால் கைப்பற்றப்பட்டது
312செலுச்சியர்களினால் கைப்பற்றப்பட்டு, தலைநகராக்கினார்கள்.
290செலுச்சியர்கள் பாபிலோனை விட்டு விட்டார்கள்.

**பாபிலோனிய இராஜாக்கள்**
**இராஜாக்கள் காலம் - அண்ணளவாக (கி.மு)**

சுமு-அபும் 1894-1881
சுமு-இஸ்-இலும் 1880-1845

சபியும் 1844-1831
அபில்-சின் 1830-1813
சின்-முபல்லித் 1812-1793
ஹம்முராபி 1792-1750
ஸம்சு-இலுனா 1749-1712
அபி-எஷீ 1711-1684
அம்மி-டித்தானா 1683-1647
அம்மி-சதுக்கா 1646-1626
சம்சு-டித்தானா 1625-1595
அகும்I

ஒன்பது ஆட்சியாளர்கள் (இடை வெளி)
கஷ்திலியாஷ்
உலாம்பரியாஷ்
அகும்II
காரா இன்டாஷ்I
கதாஷ்மான் கார்பே
குரிகல்சுI
கதஷ்மான் என்லில் ஐ
புர்னபுரியாஷ் ஐஐ 1375-1347
காரா இன்டாஷ்II?
நாத்சி புகாஷ்
குரிகல்சுII1345-1324
நாத்சி மருத்தாஷ் 1323-1298
கதஷ்மான் துர்க்கு 1297-1280
கதஷ்மான் என்லில்II1279-1265
கஷ்திலியாஷ்IV1242-1235

பத்து ஆட்சியாளர்கள் (இடை வெளி) 1234 - 1125
நேபுகாத்நேச்சார்I1124 - 1103

மூன்று ஆட்சியாளர்கள் (இடை வெளி) 1102 - 1081
மர்டக் ஷபிக் ஷேர் மதி 1080 - 1068
அடாத் அப்பால் இதினம் 1067 - 1046

பதினைந்து ஆட்சியாளர்கள் (இடை வெளி) - 1045 ?
நபு அப்பால் இதின்

ஐந்து ஆட்சியாளர்கள் (இடை வெளி) - 747 ?
நபு நாசிர் 746 - 734
நபு நதின் சேர்
உக்கின் சேர் 732 - 727
திக்லாத் பிலேசர்III729 - 727
ஷல்மனாசேர்V
மெரொடொஹ் பலாதன் 721 - 711
சார்கோன்II710 - 705 இராஜா இல்லை - உப ஆட்சியாளர் புரட்சி
பெல் இப்னி 702 - 700
அஷீர் நதின் ஷீம் 699 - 694
நேர்கல் உஷேசிப்

முஷேசிப் மர்துக் 693 - 689
எசார் ஹடோன் 689 - 681 உப ஆட்சியாளர்
எசார் ஹடோன் 680 - 669 இராஜா
ஷமாஷ் ஷீம் உகின் 668 - 648
உள் நாட்டு சண்டை
கண்டலனு 647 - 626
சின் ஷார் இஷ்குன்
நெபுபொல்சார் 626 - 605
நேபுகாத் நேச்சார் ஐஐ 605 - 562
அமெல் மர்டக் 561 - 560 - எவில் மெர்தொஹ்
நெரிகிலிசார் 559 - 556
லபாஷ் மர்தொக் 556
நபு நயிட் 555 - 539

பாபிலோனிய வீழ்ச்சி 540 - பாரசீக மன்னன் கோரேஸ் பாபிலேனை கைப்பற்றுதல்.

**தொங்கு தோட்டம்:**

புரதான உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டம் பாபிலோனிலே நேபுகாத் நேச்சரால் கட்டப்பட்டது. இதனைக்குறித்து கிரேக்க சரித்திர ஆசிரியர் ஹீரோடஸ் (கி.மு 450) சொல்கிறார்: மகாபாபிலோனிய மன்னன் நேபுகாத் நேச்சார், தனது மனைவியாகிய அமித்திஸ் விருப்பத்தின்படி,(அவள் மேதிய தேசத்திலிருந்துவந்தபடியினால், அங்கே இருக்கின்ற இயற்கை மாதிரி
பாபிலோனில் இல்லாததினாலும்)அவளுக்காக தொங்கு தோட்டத்தை கட்டினான் என்று. 1899-1917 Robert Koldeweyஎனும் ஜேர்மன் அகழ்வாராய்ச்சியளரால் கண்டுபிடிக்கப்பட்ட தொங்குதோட்டத்தின் எஞ்சிய பகுதிகள்.

**நேபுகாத்நேச்சார்:**

நேபுகாத்நேச்சார் அரசாண்ட இரண்டாவது வருடம் அவன் ஒரு கனவு கண்டான். அவனுடைய கனவிலே ஒரு பயங்கரமான மனித சிலையை கண்டான். அந்த சிலையின்; தலை பசும்பொன், மார்பும் புயமும் வெள்ளி, வயிறும் தொடையும் வெண்கலம், கால்கள் இரும்பு, பாதங்கள் களிமண்ணும் இரும்புமாக இருந்தது. பாபிலோனிய மாந்தரீகர்களாலும், குறி சொல்பவர்களாலும் அதற்கு அர்த்தம் சொல்ல முடியாமல் போயிற்று. தானியேல் அவனுக்கு அவன் கனவையும், அதன் விளக்கத்தையும் சொன்னான்.

**நேபுகாத்நேச்சார் செப்பனத்தில் கண்ட சிலை**

தானியேல் 2: 1- 49

**தலை பசும்பொன் : பாபிலோனிய சாம் இராச்சியம் (கி.மு 605- 539)**

தானியேல் 2: 36சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின்
மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில்
ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான
அந்தத் தலை நீரே.

**மார்பும், புயமும் வெள்ளி: பெர்சிய சாம்ராச்சியம் (கி.மு 539- 331)**

தானியேல் 2:39உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறோரு ராஜ்யம் தோன்றும். கோரேசு மன்னனுடைய காலம். இவன் மேதிய சக்கரவர்த்தியையும், சின்ன ஆசியாவிலுள்ள மன்னர்களையும் ஜெயித்த தன் ராச்சியத்தை பலப்படுத்தினான். பாபிலோனும், அசீரியாவும் இவனுடைய ஆட்சிக்கு கீழ்ப்பட்டிருந்தது. கோரேஸ் மன்னனைப்பற்றி ஏசாயா உரைத்த தீர்க்கதரிசனம் : ஏசாயா 44: 28- 45: 7
கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன், அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான். நேபுகாத் நேச்சாரினால் அழிக்கப்பட்ட சாலமோனின் தேவாலயத்தை கட்டுவதற்கு இவன் உதவி செய்தான். பாபிலோனிலிருந்து அநேக யூதர்களை விடுதலை செய்தான். தானியேல், செருபாபேல்,எஸ்றா, நெகேமியா இவன் காலத்தில் வாழ்ந்தனர்.

**வயிறு, தொடைவெண்கலம்: கிரேக்க சாம்ராச்சியம் ( கி.மு 331- 168 )**

தானியேல் 2:39பின்பு பூமியெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும். கிரேக்க படைத்தளபதி மகா அலெக்ஸாந்தரினால் ஸ்தாபிக்கப்பட்டது. ஐரோப்பா, ஆபிரிக்கா, மத்திய ஆசியா, இந்தியா வரைக்கும் இவனுடைய இராணுவம் வந்தது. அநேகருடைய கருத்துப்படி மகா அலெக்ஸாந்தர் தான் இதுவரைக்கும் இருந்த படைத்தளபதிக்குள் சிறந்தவன். தன்னுடைய 33 ஆவது வயதில் நோய் காரணமாக மரணத்தை தளுவிக்கொண்டான். இவனுடைய மரணத்திற்கு
பின்னர் கிரேக்க இராச்சியத்தை இவனுடைய 4 தளபதிகளும் பங்கிட்டு கொண்டனர். (தானியேல் கண்ட தரிசனம் அதிகமாக இதை விளக்கி காட்டுகின்றது. தானியேல் 8ஆம் அதிகாரத்தில் வரும் வெள்ளாட்டுக்கடா இவனையே குறிக்கின்றது). கிரேக்க ஆதிக்கத்தின் பாதிப்பை நீங்கள் வேதாகமத்திலும் காணலாம். புதியேற்பாடு கிரேக்க மொழியில்தான் முதன் முதலில் எழுதப்பட்டது.

**மகா அலெக்ஸாண்டர்**

**கால்கள் இரும்பு: ரோம சாம் ராச்சியம் (கி.மு 168- கி.பி 476)**

தானியேல் 2:40நாலாவது ராஜ்யம் இரும்பைப்போல உரமாயிருக்கும். இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்ன பின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைப்போல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும். லத்தீன் மொழியில் ரோம் என்றால் பலம் என்று
பொருள்படும். உலோகங்களிலே இரும்பு மிகவும் பெலம் வாய்ந்தது. ரோம சாம்ராச்சியம் அகஸ்துராஜனினால் கட்டப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் சமயம், அகஸ்துராஜன் தான் அரசாண்டான்(லூக்கா 2: 1).இவனுடைய பேரன் யூலியஸ் சீசார். மற்ற எல்லா சாம்ராச்சியங்களைப்பார்க்கிலும் இது
வித்தியாசமானது. ஏனென்றால் இதனுடைய பாதிப்பு களிமண், இரும்புமான பாதங்களின் இராச்சியத்திலும் வருகின்றபடியால். ரோம சாம்ராச்சியம் மேற்கு, கிழக்காகவும் இரண்டாக பிளவுபட்டு. பின்பு பல நாடுகளாக பிரிந்தது.

**களிமண், இரும்பு: ஐரோப்பா (கி. பி 476- இரண்டாவது வருகை மட்டும்)**

தானியேல் 2:41பாதங்களும் கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும். ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும்.

**கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது**

தானியேல் 2:42என்னவென்றால், அந்த ராஜ்யம் ஒருபங்கு உரமும் ஒருபங்கு நெரிசலுமாயிருக்கும்.
தானியேல் 2:43நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள். ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள். கடைசியாக எழும்பும் இராச்சியம் இரும்பும் களிமண்ணும் எப்படி ஒன்று சேராதோ அப்படி அவர்களும் ஒன்று சேரமாட்டார்கள். ஆனால் அவர்கள் ஒரு இராச்சியமாக இருக்க முயற்சி செய்வார்கள். ஐரோப்பா பலவித கூட்டு நடவடிக்கைகளை
எடுக்கின்றது. கல்யாணம், சண்டை, சமயம், பொருளாதாரம். இப்படி பல விதங்களில் தங்களுக்குள்ளே ஒற்றுமையை கொண்டுவர முயற்சிக்கிறார்கள்.

**ராச்சியங்களை நிர்மூலமாக்கி என்றென்றைக்கும் நிற்கும் கல்:**

2:44அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார். அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த
ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

இயேசு கிறிஸ்துவின் இர்ணடாவது வருகையையும், அவருடைய ஆயிரம் வருட அரசாட்சியையும் குறிக்கின்றது.

**நேபுகாத்நேச்சார் (பகுதி 2)**

நேபுகாத் நேச்சாரின் தந்தை நேபுப்பொல்சார் புதிய பாபிலோனிய சாம்ராச்சியத்தை ஸ்தாபித்தான். தந்தை அரசாளும் சமயத்திலேயே நேபுகாத் நேச்சார் சிறந்த படைத்தளபதியாகவும், பட்டத்து இளவரசனாகவும் திகழ்ந்தான். "எகிப்தின் பார்வோன் நேகோவை" தோற்கடித்து அவனுடைய இராச்சியத்தை கைப்பற்றினான். நேபுகாத் நேச்சார் ஏறக்குறைய கி. மு 630 ஆண்டு பிறந்தார், கி. மு 562 ஆண்டு தனது 68 ஆவது வயதிலே மரித்தார்.
பாபிலோனில் அவனைப்போல இராஜா அவனுக்கு முன்பு இருந்ததுமில்லை பின்பு வந்ததுமில்லை. தனது தந்தையின் மரணத்திற்கு பின்னர் இராச்சிய பாரத்தை கி.மு 605 ஆண்டு ஏற்றுக்கொண்டான். நேபுகாத் நேச்சாரின் காலத்தில் பாபிலோன் உலகத்திலே பெரிய நகரமாக விளங்கியது. பாரிய விஸ்தீரணமான இடத்திலே பாபிலோனை கட்டினான்.

**வேதாகமத்தில்: எரேமியா 27: 6**

தேவனாகிய கர்த்தர் பாபிலோனிய மன்னனாகிய நேபுகாத் நேச்சாரை தனது ஊழியக்காரன் என்று ஆழைத்தார்.
இப்பொழுதும் நான் இந்தத் தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய

நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்.
அது மட்டுமல்ல, அவனுடைய காலத்திலிருந்து கிறிஸ்துவின் 2 வருகை மட்டுமுள்ள சம்பவங்களையும் சொப்பனத்திலே தேவனாகிய கர்த்தர் தீர்க்கதரிசனமாக தெரிவித்தார்.
இவனைக்குறித்து வேதத்தில் பல தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டுள்ளது.எங்களுக்கு தெரிந்தவாறு, நேபுகாத் நேச்சார் யூதாவின் இராஜாவாகியயோயாக்கீமைமுறியடித்து அவனைக்கப்பம் கட்டும்படி செய்தான். அவன் தந்தை மரித்துப்போன செய்தியை கேள்விப்பட்ட போது, அவன் பாபிலோன் சென்று தன்னுடைய ஆளுகையை ஸ்திரப்படுத்தினான். மூன்று வருடங்களின் பின்பு யோயாக்கீம் கலகம் செய்ததினால் அவன் மீது படையெடுத்து, அவனைக்கொன்று போட்டு அவனுடைய மகனாகியயோயாக்கீனைஇராஜாவாக்கினான். இவனும், தன்னுடைய இராச்சியபாரத்தின் மூன்றாவது மாதம் கலகம் செய்தபடியால், அவனையும் அநேகம் யூதர்களையும் சிறைப்பிடித்துக்கொண்டு பாபிலோன் சென்றான். அவனுக்கு பதிலாக அவன் சிறிய தகப்பன்சிதேக்கியாவைஅரசனாக்கினான். ஒன்பது வருடங்களின் பின் சிதேக்கியாவும் கலகம் செய்ததினால்,நேபுகாத் நேச்சார் எருசலேமை இரண்டு வருடங்களாக முற்றுகை போட்டு, அதனைப்பிடித்து முற்றுமாகஅழித்துப்போட்டான்.சிதேக்கியாவின் குமாரர் அனைவரும், தேசத்தின் பிரபுக்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். சிதேக்கியாவின் கண்களைப்பிடுங்கி குருடாக்கி அவனை மரிக்கும் வரையில் பாபிலோனிலேயே வைத்திருந்தான்.சாலமோனினால் கட்டப்பட்ட எருசலேம் தேவாலயம் நேபுகாத் நேச்சரினால் அழிக்கப்பட்டது. ( நேபுகாத்நேச்சரின் படைத்தளபதியினால்)நேபுகாத் நேச்சார் தன்னுடைய இராச்சியத்தை அதிகமாய் விஸ்தரித்து பேர் பெற்றான். சில காலம் பைத்தியமாக காட்டிலே சஞ்சரித்தான். அவனுக்கு புத்தி திரும்பிய போது பரலோக தேவனைப்புகழ்ந்தான்.

இவனைப்பற்றி 2இராஜாக்கள், எரேமியா, 1நாளாகமம், எசேக்கியல், தானியேல் புஸ்தகங்களில் வாசிக்கலாம்.இவனுடைய அரண்மனையில் தானியேல் ஊழியம் செய்தான்.
நேபுகாத் நேச்சார் (கி. மு 605- 562)

**ஹம்முராபி:**

ஹம்முராபிஆதி பாபிலோனிய சாம்ராச்சியத்தின் 6 ஆவது அரசன்(கி.மு 1792- 1750).

ஹமுராபி தன்னுடைய ஆட்சி காலத்தில் பல சிறப்பான காரிங்களை செய்தான் ( நீர்ப்பாசனத்துறை, வரி வசூலிப்புத்துறை மற்றும் சமயம் சம்பந்தமான காரியங்கள்). முதல் முப்பது வருட அவனுடைய ஆட்சியில் அவன் ஒரு சிறிய ராச்சியத்தின் அரசானகவே திகழ்ந்தான். அதன் பின்பு அவன் செய்த தொடர் யுத்தங்களில் அவன் வெற்றியீட்டி பல இடங்களை கைப்பற்றினான் (லார்சா இராச்சியம், எஷீன்னா, ஆசூர், பிற்பாடு மரி). அவனுடைய காலத்தில் தான் மர்டக் (பாபிலோனிய தெய்வம்) பிரபல்யமான தெய்வமாகியது. ஹமுராபி மன்னன் சிறந்த யுத்தங்களை நடத்தியிருந்த போதிலும், எல்லாராலும் மிகவும் மதிக்கப்படும் காரியம்:

அவனுடைய சட்டங்கள். முதன் முதலாக எழுதப்பட்ட சட்டங்கள் ஹமுராபி மன்னனுக்கு 400 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது. ஹமுராபி மன்னன் 282 கட்டளைகளை தான் ஆண்ட காலத்தில் எழுதி வைத்திருந்தான்.நாம் தற்காலங்கங்களில் பாவிக்கும் கட்டளைகள் போல் இல்லாவிட்டாலும், அவனுடைய கட்டளைகளில்அவன் நீதியையும், நியாயத்தையும் கடைப்பிடித்தான்என்று

தெரிகிறது. அவனுடைய கட்டளைகளை அவன் ஆண்ட ராச்சியம் முழுவதும் பிரகடனப்படுத்தி அதை நடை முறையில் கொண்டுவந்தான்.இவனுடைய ஆண்ட காலங்களை ஆதி பாபிலோனுடைய பொற்காலம் என்று வர்ணிப்பர்.

ஹமுராபி அரசனின் சட்டங்கள் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்பது போன்ற கட்டளைகள்.

ஹமுராபி மன்னனுடைய சில சட்டங்கள்:
சட்டம் 195.......... ஒரு மகன் தன்னுடைய தந்தையுடன் பிரச்சனைப்பட்டால் அவனுடைய கைகள் வெட்டப்பட வேண்டும்
சட்டம் 196.......... கண்ணுக்கு கண் பிடுங்கப்படுதல் வேண்டும்
சட்டம் 197.......... யாராவது ஒருவனுடைய எலும்புகளை முறித்தால், அவனுடைய எலும்பும் முறிக்கப்பட வேண்டும்
ஹம்முராபி
ஹம்முராபி மன்னனுடைய சிலை.

**சார்கோன்:**

**சார்கோன்(அக்காடியா ராச்சியம் கி.மு 2350- 2200)**

அக்காடிய மக்கள் செமித்திய இனத்தை சேர்ந்தவர்கள். அக்காடிய ராச்சியத்தை ஸ்தாபித்தசார்கோன் மன்னன்பிறந்த இடம் யாருக்கும் தெரியாது. உண்மையான பெயரும் தெரியாது.இவனுடைய கதை மோசேயின் கதையைப்போல இருக்கிறது

இவனுடைய தாய் ஒரு பெண் மத குரு. அவள் இவனை ஒரு பெட்டியிலே வைத்து, ஐபிராத்து நதியிலே விட்டாள். அந்தப்பெட்டியை ஒரு வயது முதிர்ந்த தோட்டக்காரன் கண்டெடுத்து, உள்ளே குழந்தையைக்கண்டு, அதை தன்னுடைய சொந்தப்பிள்ளையைப்போல வளர்த்தான். பின்பு கிஷ் நாட்டின் மன்னனுடைய அரண்மனையிலே சார்கோன் வேலைக்கு அமர்த்தப்பட்டான். அங்கே இருந்த இளவரசி இஷ்தார் மூலம் கிஷ் நாட்டின் மன்னனாக்கப்பட்டான்.

அதன் பின்பு உருக் தேசத்தின் மேல் படையெடுத்தான். சுமேரிய ஆட்சியை வீழ்த்தி தன்னுடைய அக்காடியா இராச்சியத்தை ஸ்தாபித்தான். அக்காடியா எனும் நகரத்தையும் உருவாக்கினான். அவன் தன்னுடைய கடவுள் இஷ்தார்-க்காக ஒரு அரண்மனையையும், கோவிலையும் கட்டினான்.அகாதே நகரம் சரியாக எங்கே இருந்ததென்று இதுவரையிலும் யாரும் கண்டுபிடிக்கவில்லை. மக்கள் மத்தியிலே பேச்சு இருந்தது, சார்கோன் மன்னனின் 5400 போர்வீரர்கள் ரொட்டி சாப்பிடுவார்கள் என்று. இந்தப்பேச்சு, சார்கோன் மன்னனின் அரண்மனை எவ்வளவு பெரிதாக இருந்திருக்கும் என்று காட்டுகிறது.

**சார்கோன் மன்னன் (முகமூடி)**

**கில்காமேஷ்:**

**கில்காமேஷ் (சுமேரியா கி.மு 3000)**

கில்காமேஷ் உலகத்திலே எழுதப்பட்ட புராதன கதைகளில் மிகவும் பழமை வாய்ந்தது.இது வரைக்கும் கண்டுபடிக்கப்பட்ட அகழ்வுகளின் படி இது தான் மிகவும் பழமையான எழுத்து வடிவிலுள்ள கதை. இதிலே குறிப்பிடப்பட்டுள்ள விடயம்: சுமேரியாவிலுள்ள உருக் தேசத்தை ஆட்சி செய்த அரசன் கில்காமேஷ் பற்றியும், அவன் நாட்களில் நடந்த வெள்ளப்பெருக்கைப்பற்றியும். உண்மையில் இப்படி ஒரு அரசன் இருந்ததற்கான எந்த ஆதாரங்களும் இல்லாவிட்டாலும், இவனையும் சுமேரிய அரசர்கள் வரிசையில் சேர்த்திருக்கிறார்கள்.
கில்காமேஷின் கதை 12 களி மண்தகடுகளில் எழுதப்பட்டிருக்கின்றது. எழுதப்பட்ட மொழி அக்காடியா. உருக் எனும் வார்த்தை தான் பிற்காலங்களில் ஈராக் என்று திரிபு பெற்றது.கில்காமேஷ் மூன்றில் இரு பங்கு கடவுள், மூன்றில் ஒரு பங்கு மனிதன்.
நோவாவின் கதை ஜலப்பிரளயத்திற்கு பின்பு மக்கள் மத்தியில் பேச்சு வளக்கில் இருந்தது. அதுவே கில்காமேஷ் ஆக திரிபு பெற்று அக்காடிய மக்களின் ஆட்சியல் எழுதப்பட்டது.ஏனென்றால் கில்காமேஷின் கதை அக்காடிய மொழியில் எழுதப்பட்டிருப்பதனாலும். எழுதிய காலமும் அக்காடி இராச்சியத்தின் காலமாக இருப்பதனாலும். ஆனால் கில்காமேஷ் ஒரு சுமேரிய மன்னன்.
கில்காமேஷ் களிமண் தகடுகளில் மட்டுமல்ல உலகத்தின் சகல கண்டகளிலுமுள்ள புராதன மொழிகள் அனைத்திலும் உலகம் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்ட கதைகள் உண்டு.

தமிழில்கூட அப்படி கதை ஒன்று இருக்கின்றது. முதலாவது தமிழ்ச்சங்கம் மகா ஜலப்பிரளயத்தினால் குமரிக்கண்டத்தில் அரைவாசி தண்ணீருக்குள் அமிழ்ந்ததென்றும், அதிலிருந்து தப்பிய மக்கள் இரண்டாவது தமிழ் சங்கத்தை தொடங்கினார்கள் என்றும், பின்பு குமரிக்கண்டத்தின் மற்றப்பகுதியும் மூழ்கையில், இளவரசன் திருமாறன் தமிழ் நாட்டிற்கு சில தமிழ் இலக்கியங்களை காப்பாற்றிக்கொண்டு, நீந்தி வந்தார் என்றும், ..... தமிழில் உள்ள புராதான கதை சொல்கின்றது.

.
கில்காமேஷ் எழுத்துக்களை படத்தில் காணலாம்.

**தெய்வங்கள்:**

பாபிலோனியர்களுக்கு அனேக தெய்வங்களை வைத்திருந்தார்கள்.

சுமேரியவிலிருந்து சில கடவுள்கள், அக்காடியாவிலிருந்து சில கடவுள்கள், மலைதேசங்களிலிருந்து சில கடவுள்களை அவர்கள் தங்களது கடவுள்களாக வைத்திருந்தார்கள். இந்தக்கடவுள்களின் தேவைகளும் ஒவ்வொன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. அதிகமான கடவுள்கள் பாபிலோனியர்களை அச்சுறுத்தும் கடவுள்களாகவே இருந்தன. அவர்களும் கடல், மண்;, மின்னல், இடி, பாலைநிலம், தெய்வம், வெளிச்சம், இப்படி பல இயற்கைகளுக்கென்று ஒவ்வொரு கடவுள்களை வைத்திருந்தனர். இவைகளைத்தவிர்த்து நகரத்துக்குரிய கடவுள்களும் இருந்தனர்.

பாபிலோனியர்கள் சாஸ்திரங்களிலே நம்பிக்கையுள்ளவர்கள், அவர்கள் கிரகங்களை கணித்து கடவுளின் செயல் என்று செயற்பட்டார்கள். பாபிலோனிய அநேக தெய்வங்கள் வானத்திலுள்ள கிரங்களே: சின் (சந்திரன்), ஷமாஷ்(சூரியன்), இஷ்தார்(வியாழன்).

**சில முக்கியமான பாபிலோனிய தெய்வங்கள்:**

அனு: மேல் வானத்தின் தெய்வம்
மர்டக்:பாபிலோனின் தேசியக்கடவுள்

தியாமத்: வலுசர்ப்ப தெய்வம் (பெண்)
கிங்கு:தியாமத் தெய்வத்தின் புருஷன்
என்லில்:காலநிலைகளின் தெய்வம்
நபு:கலைத்தெய்வம்

இஷ்தார்: காதல் தெய்வம் (பெண்)
எனுர்தா:யுத்தத்தின் தெய்வம்
அன்ஷார்:வானத்தின் தந்தை

ஷமாஷ்: சூரியன், நீயாயாதிபதி தெய்வம்
அஷீர்

(அசூர்): அசீரியர்களின் தேசியக்கடவுள்

கிஷார்: உலகத்தின் தந்தை

பாபிலோனிய நகரத்தின் தெய்வத்திற்கு கட்டப்பட்ட சிகுரத் கோவிலை படத்தில் காணலாம்.

**வேதாகமத்தில்:**

2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, சங்கீதம், ஏசாயா, எரேமியா, எசேக்கியல், தானியேல், மீகா, சகரியா, மத்தேயு, அப்போஸ்தலர் நடபடிகள், 1 பேதுரு, வெளிப்படுத்தல் ஆகிய புஸ்தகங்களில் வாசிக்கலாம். பாபேலைப்பற்றி ஆதியாகம் 10- 11 ஆம் அதிகாரங்களில் வாசிக்கலாம்

**சிறு குறிப்புக்கள்**

ஆதி அப்போஸ்தலர் காலத்திலேயே பாபிலோனில் சபை உருவாகிற்று.
1 பேதுரு 5: 13 உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.
இந்த விடயம் ஒரு சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. ஆதி அப்போஸ்தலர் காலத்தில் பாபிலோனியா தேசம் ஒரு சிறு பிரதேசமாக இருந்தது. ஆதி அப்போஸ்தலர் காலத்தில் பாபிலோனியாவில் சபைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பாபிலோனியா எனும் வசனம் ரோம சாம்ராச்சியத்தையே குறிக்கின்றது, என்று பலர் சொல்கின்றனர். ஏனெனில்: மாற்கு பவுலுடன் அந்தக்கால கட்டத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தார் என்று நம்பப்படுகின்ற படியால்.

வெளிப்படுத்தல் புஸ்தகத்தில்வரும் பாபிலோன், அநேக வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, அது பாபிலோன் நாட்டைக்குறிக்கவில்லை, மாறாக பாபிலோனின் ஆவியைக்குறிக்கின்றது. பாபிலோனிய ஆவி என்பது விக்கிரக ஆராதனை, பில்லி சூனியங்கள், சமயங்கள், சாஸ்திரங்கள், மார்க்கங்கள் என்பவற்றைக்குறிக்கும். அநேகர் இதை ரோம சாம்ராச்சியம் என்கிறார்கள்.
சிலர் அமெரிக்கா என்கின்றனர்.
14:8 வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது!
தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்.
17:18 நீ கண்ட ஸ்திரீயானவள் ப மியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற
மகா நகரமேயாம் என்றான்.

எந்த நாடாக இருக்கும் என்கின்ற ஆராய்ச்சியை விட, எங்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கின்றதா, இல்லையா அல்லது எழுதப்பட்டு கிறுக்கப்பட்டிருக்கின்றதா என்று ஆராய்தல் மேல்.எல்லா விதத்திலும் எங்களுடைய இரட்சிப்பை காத்துக்கொள்ள பிரயாசப்படுவோம். எல்லாருக்காகவும் ஜெபிப்போம். விமர்சகர்களாக இருப்பதை விட, கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றுவோம். தேவன் தாமே எங்கள் எல்லாருடனும் கூட இருப்பாராக. காலம் சமீபித்திருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவரது வழியை பின்பற்றுவோம்.
எனக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்